நாள் : 23.09.2024

வா.சா. : 1

பெயர் : சீத்தாராமன்

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என்னுடைய பிறந்த தேதி 12.06.1980. பள்ளியில் சேர்க்கும்போது என்னுடைய பிறந்த தேதி 20.06.1980 என்று சொல்லி சேர்த்திருக்கிறார்கள். நான் மயிலாடுதுறை,திவான் பகதூர் தி. அரங்காச்சாரியார் தேசிய மேல்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரைப்படித்தேன். அதன் பிறகு பத்தாம் வகுப்பு தேர்வு நேரடியாக எழுதினேன். அதன்பிறகு ஏழுமலையான் ITI ல் எலக்டரிக்கல் course படித்தேன். எந்த வருடத்தில் என்றால் 1997 ல் படித்தேன். அதன்பிறகு நிறைய கம்ப்யூட்டர் course படித்திருக்கிறேன். Auto CAD படித்திருக்கிறேன். எனது கல்வித்தகுதி குறித்த ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இது வரை தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். என்னுடைய தந்தை பிறந்தது ஆகஸ்ட் மாதம் 1949 வது வருடம். என் அண்ணன் ரகுராமன் பிறந்தது 1973 நவம்பர் மாதம். என் அண்ணனின் கல்வித்தகுதி தெரியுமா என்றால் தெரியும். Diploma Electrical படித்திருக்கிறார். 8 பேப்பர் அரியர்ஸ் வைத்திருக்கிறார். இன்னும் complete செய்யவில்லை. என் அண்ணன் ரகுராமன் முதன் முதலில் எந்த நாட்டிற்கு எந்த வருடம் போனார் என்றால் துபாய்க்கு 1993 அல்லது 1994 ல் போனார். என் அப்பா அங்கு வேலைப்பார்த்து கொண்டிருந்ததால் சுற்றுலா விசாவில் போனார். என் அப்பா கூறைநாட்டில் தற்காலிக கூறை அமைத்து மிதிவண்டி பழுது பார்க்கும் கடை வைத்திருந்தார் என்ற சங்கதி எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு 10 வயது இருக்கும்போது என் அப்பா என்னிடம் இங்குதான் நான் கடை வைத்து இருந்தேன் என்று சொல்லிக்காட்டினார். அதனால் தெரியும். 1981 ம் ஆம் ஆண்டு கூலி வேலைக்காக வெளிநாட்டிற்கு போனார் என்ற சங்கதியும் 5500 மாதம் சம்பாதித்தார் என்ற செய்தியும் எப்படி தெரியும் என்றால் என் அப்பா சொல்லியும் அவர்

பணம் அனுப்பியதை வைத்தும் அந்த பேப்பரை பார்த்தும் தெரிந்து கொண்டேன். என் அப்பா வெளிநாட்டில் வேலை செய்து அனுப்பிய பணத்திற்கான ஆவணத்தை பார்த்திருக்கிறேனா என்றால் ஆமாம். அந்த பணத்தை யார் செலவு செய்வார்கள் என்றால் என் அம்மா. எனது சத்திய பிராமாண வாக்குமூலத்தில் பாரா 9 ல் என் அப்பா வெளிநாட்டில் வேலைபார்த்த காலகட்டத்தில் குடும்பத்தை கவனிக்க சரிவர பணம் எதுவும் அனுப்பாமல் எந்த வித பராமரிப்பும் செய்யாமல் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அப்போது எங்கள் குடும்பத்தை யார் பராமரித்தார்கள் என்றால் எங்கள் அம்மாவை பெற்ற பாட்டியும் என் பெரியப்பாவும் பண உதவி செய்தார்கள். என் பெரியப்பா என்ன வேலை செய்தார் என்றால் librarian ஆக இருந்தார். என் பாட்டி காரைக்காலில் கணவனை இழந்தவர் என்பவர் என்பதால் OAP பணம் வாங்கினார். என் அம்மா குடும்பத்தை பராமரித்ததாக சொல்லியிருப்பதால் என் அம்மா என்ன படித்திருக்கிறார் என்றால் தெரியவில்லை. நிலத்தை லீஸ்க்கு என் பெரியப்பாவிடம் விட்டிருந்தோம். அவர் நெல் மற்றும் பயிர் மற்றும் பணம் கொடுத்து உதவுவார். என் அப்பாவிற்கு சொத்துக்கள் இருந்தது என்றாலும் அதன் மூலம் வருமானம் வந்தது என்றால் ஒரு வீடும் ஒரு ஏக்கர் நிலமும் இருந்தது. சத்திய பிராமாண வாக்குமூலத்தில் பாரா 9 ல் 3 ம் பிரதிவாதியாகிய என் அண்ணன் ரகுராமன் குடும்பத்தின் நிலை தெரியாமல் தன் மனம் போன போக்கில் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று எங்களை மேலும் கஷ்டத்திற்கு ஆளாக்கியுள்ளார் என்று சொல்லியிருப்பதால் யாரை கஷ்டத்திற்கு ஆளாக்கினார் என்றால் எனது அண்ணன் சிவராமனை கஷ்டப்படுத்தினார். எங்களை என்பது சிவராமனையா என்றால் ஆமாம். நான் முதன் முதலாக எந்த நாட்டிற்கு எந்த வருடத்தில் வேலைக்கு போனேன் என்றால் 1998 ல் துபாய் நாட்டிற்கு வேலைதேடி போனேன். 1999 ல் powertech swicher industry என்ற நிறுவனத்தில் Auto CAD drafts man ஆக வேலைக்கு போனேன். எவ்வளவு சம்பளம் என்றால் (1500 UAE திரகம்) இந்திய மதிப்பின் 18 ஆயிரம் சம்பளம். இந்த நிறுவனத்தில் மூன்று வருடம் வேலைபார்த்தேன். இதன்பிறகு என்ன வேலை பார்த்தேன் என்றால் துபாயில் சொந்தமாக சிறிய எலக்கட்ரிகல் மெயின்டனன்ஸ் கடை வைத்திருந்தேன். நான்

அந்த நாட்டில் labour department ல் பதிவு செய்திருந்தேனா என்றால் ஆமாம். துபாய் அரசாங்கத்தில் அனுமதி வாங்கி தொழில் நடத்தி வந்தேனா என்றால் அந்த காலகட்டத்தில் என்னுடைய பெயரில் அரசாங்க அனுமதி வாங்கமுடியாது. ஈஷா அலி ஜாக்சின் முகமது என்பவர் பெயரில் லைசென்ஸ் வாங்கி நான் தொழில் நடத்தி வந்தேன். இந்த தொழிலை எந்த ஆண்டு வரை நடத்தினேன் என்றால் 2003 ல் தொடங்கி 2014 வரை நான் நடத்தினேன். தற்போது அந்த தொழிலை ரகுராமன் நடத்தி வருகிறார். நான் அவரிடம் கொடுத்து விட்டு வந்துள்ளேன். அந்த காலகட்டத்தில் நான் துபாய் நாட்டில் வங்கி கணக்கு வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். ராஸ் அல் கைமா மற்றும் Mashreq பேங்கில் நிறைய transaction வைத்திருந்தேன். ஏழு, எட்டு பேங்கில் வங்கி கணக்கு வைத்திருந்தேன்.

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.